# நிதிநிலை முடிவுகளை அறிவித்த டி.சி.ஐ

சென்னை, 30, ஜன: இந்தியாவின் முன்னணி ஒருங்கிணைந்த விநியோகச் சங்கிலி மற்றும் லாஜிஸ்டிக்ஸ் தீர்வு வழங்குநரான டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா லிமிடெட் ("TCI"), டிசம்பர் 31, 2021-இல் முடிவடையும் மூன்றாவது காலாண்டிற்கான அதன் நிதிநிலை முடிவுகளை அறிவித்தது.

ஸ்டேண்ட்அலோன் செயல்திறனின் சிறப்பம்சங்கள்: Q3 FY2022 vs. Q3 FY2021 ஆனது, செயல்பாடுகளிலிருந்து வரும் வருவாய் ரூ.759 கோடியாகும், வளர்ச்சி 6.2% y-o-y மற்றும் 3.1% தொடர்வரிசை அடிப்படையில், EBITDA ₹114 கோடியாகும்; ஒப்பீட்டளவில் இது Q3 FY2021-இல் ₹84 கோடியாக இருந்தது. EBITDA-வின் மார்ஜின் 14.9% ஆகும்; ஒப்பீட்டளவில் இது Q3 FY2021-இல் 11.6% -ஆக இருந்தது. PAT-ஆனது ₹78 கோடியுடன் 94% வளர்ச்சியாகும்; ஒப்பீட்டளவில் இது Q3 FY2021-இல் 40 கோடியாக இருந்தது. PAT மார்ஜின் 10.1% -ஆகவும்; ஒப்பீட்டளவில் இது Q3 FY2021-இல் 5.5% -ஆகவும் இருந்தது.

நிதிநிலை முடிவுகள் குறித்து TCI-யின் நிர்வாக இயக்குநர் திரு. வினீத் அகர்வால் கருத்து தெரிவிக்கையில், "நடப்பு நிதியாண்டின் மூன்றாவது காலாண்டு மற்றும் 9 மாதங்களுக்கான அறிக்கை ஊக்கமளிப்பதாகவும், நாட்டின் நேர்மறையான வணிக வேகத்துக்கு ஏற்பவும் உள்ளன. அனைத்து சேவை வழங்கல்களும் உயர்மட்டம் மற்றும் கிடைமட்டம் ஆகிய இரண்டிலும் சிறப்பாக செயல்பட்டன." என்றார்.

கார்ப்பரேட் போர்டு அறைகள், உட்கட்டமைப்பில் அரசாங்க முதலீடுகள் மற்றும் ஆத்மநிர்பார் பாரத் ஆகியவற்றில் லாஜிஸ்டிக்ஸ்-இன் முக்கியத்துவமானது TCI போன்ற ஒரு வலுவான ஒருங்கிணைந்த மல்டிமாடல் லாஜிஸ்டிக்ஸ் ஜாம்பவானுக்கு நல்ல அறிகுறியைத் தெரிவிக்கின்றன. தேவையைப் பூர்த்தி செய்தல் மற்றும் வாடிக்கையாளர் சேவைக்கான தொழில்நுட்பம் கொண்ட தளத்தால் இயக்கப்படும் 3PL & கோள்டு சப்ளை செயின் சொல்லூஷன்ஸ்-உடைய தேவை அதிகரித்து வருவதை நாங்கள் தொடர்ந்து காண்கிறோம்.